Madura Sri Bala Shanmugananda Sabah

MOHANASUNDARAM

BY J. R. RANGARAJU ESQ.

மதுரை

ஸ்ரீ பால ஷண்முகானந்த சபையார்

மோகன சுந்தரம்.

கதையின் சுருக்கம்.

மகா-ா-ஸ்ரீ J R ரெங்கராஜு அவர்கள் இயற்றியது

லெக்ஷ்மி விலாஸ பிரஸ், நாகபட்டணம்.

வேலுமயிலுந் துணை.

மோகனசுந்தரம்.

முக்கிய சம்பவங்கள்.

குடும்ப விவாதம். (வெகுவேடிக்கை) இளங்காதலர் சந்திப்பு (பிரமானந்தம்) லீலாவதி பூபதியிடம் காட்டும் மோக ஆவேசம் (அற்ப சுகத்தின் கேடு) ஆள் மாராட்டத்தால்நேர்ந்த கொலை (பரிதாபக்காக்ஷி) துஷ்டர்கள் துணிபு (பயங்கரம்) துப்பறியும் கோவிந்தன் சாமர்த்தியம், இந்நாடகத்தில் கோவிந்தன் ஏமாறுவது, மனதை திடுக்கிடச்செய்யும் விநோதம்) பறையர்களிடம் இன்ஸ்பெக்டர் படும் கோர சம்பவம், (கொடுமையிலும் கொடுமை.

இந்நாடகத்துக்கென தயாரித்துள்ள சீன்களைப்போல இதுவரை எக்கம்பெனியாரும் கட்டியது கிடையாது

1 மோகனசுந்தரம் பின்புற மாடிக்காக்ஷி 2 கோவிந்தன் அகப்பட்டு விழிக்கும் கண்ணாடி அறை 3 விசாலாக்ஷி இருக்கும நந்தவன வைபவம். எதிரே தோன்றும் பறையர் குடிசை முதலியன நாடகக்காக்ஷியில் அபூர்வமென்றெண்ணலாம்.

அங்கம். 1

1 சீன் 1. பணப்பேய்பிடித்த லீலாவதி தன் புருஷன் உதவியால் பிடாரிபுரம் ஜமீன்தார் வீட்டில் நகைகளைத் திருடிவர தீர்மானிக்கிருள். அவ்வாறு திருடிய நகைகளை பந்தோபஸ்துக்கு மோகனசுந்தர முதலியார் பாங்கியில் வைக்கபாலுமுதலி கொண்டுபோகிறான். 3 லீலாவதியை சந்தேகித்த ஜமீன்தார்

போலீஸில் ரிப்போர்ட்செய்ய இன்ஸ்பெக்டர் அவ்விருவரையும் கைதியாக்கிக்கொண்டு போகிறார். 4 மஜிஸ்ரேட் விசாரணை முடிந்து அவ்விருவரும் ஸெஷன்ஸ் கோர்டுக்கு கமிட்டி செய்யப் படுகிறார்கள் 5 பாலுமுதலி தம்பி சீதாராமன் அண்ணனுக் கும் அண்ணிக்கும் நேர்ந்த தண்டனையை நினைத்துவருந்துகிறான்

சீன் 1 விசாலாக்ஷிக்கு சங்கீதம் கற்றுத்தர நற்குண குல மாது தேவையென பத்திரிகையில் பிரசுரஞ் செய்வதாய் சுந்தர முதலியார்வாக்களிக்கிறார். 2 விசாலாட்சியும், அவள் முறை மாப் பிள்ளை பூபதியும் விவாகம் புரிய நிச்சயிக்கிறார்கள் 3 விடுதலை யடைந்த பிறகு சீமாட்டியென நடிக்கும் லீலாவதி விள பாத்

அங்கம் 2

தைக்கண்டு தானே வாத்தியச்சியர் யமர நீர்மானிக்கிறள். 4 அவள் காட்டிய பொய் நற்சாட்சி கடிதத்தை நம்பிய சுந்தரமுத லியார் லீலாவதியை விசாலாட்சிக்கு சங்கீத வாத்திச்யாயமர்த் துகிறார்.

5 தந்தையை மயக்கி, வீட்டுக்கும் எஜமானியாய் நடந்து தன்னையும் அதிகாரத்துடன் கண்டிப்பதைக்கண்ட விசாலாட்சி வருத்தப்படும் சமயம், அவளிடம் வந்த லீலாவதி வம்புவிளைக்க விசாலாட்சி சகிக்கமுடியாது கண்டித்துப்போய்விடுகிறாள் லீலா வதி சுந்தர முதலியாரை மணந்த பிறகு விசாலாட்சிக்கு கெடுதி தேட வர்மிக்கிறாள். 6 லீலாவதியின் அழகை பூபதியின் எதி ரிலும் புகழ்ந்து பேசக்கேட்ட பூபதி சுந்தர முதலியாரை நிந் திப்பேச, அவனை தன் வீட்டைவிட்டு வெளியே போய்விட வேண்டுமென கட்டளையிடுகிறார். 7 லீலாவதி சுந்தர முதலி யாரை எமனுலகுக்கேற்ற தன்னை மணப்பதாக கூறக்கேட்ட பூபதி அவனைக் கடிந்துபோன பிறகு சுந்தர முதலியார் லீலா வதியை மணப்பதாய்க்கூறி முத்தமிடும்சமயம் திடீரென வந்த விசாலாக்ஷி தன் தந்தையை கடிந்துபேச, சுந்தர முதலியார் கோபங்கொண்டு தன் மகளை அடிக்கப்போவதை லீலாவதி தடு த்து, தாங்கள் இருவரும் அன்னியோன்யமாயிருப்பதாகக் கூறு கிறாள். மணப்பந்தலில் சுந்தர முதலியாரையும் லீலாவதியையும் மணமகனும் மணமகளுமாகக் கண்ட விருந்தினர் நிந்தித்துப் போகிறார்கள்.

அங்கம் 3

சீன் 1 தனக்குவந்த கடிதத்தை தன் தந்தை கணக்கனுப்பி யதைத் தடுத்த லீலாவதி தானே வாங்கி பிரிக்கப்போவதைக் கேள்விப்பட்ட விசாலாக்ஷி தன் தகப்பனாரிடம் வந்து தன் கடி தத்தைக்கேட்க, விசாலாட்சிக்கும் லீலாவதிக்கும் வார்த்தை

வளர்ந்து லீலாவதி விசாலாக்ஷியை அடிக்க, விசாலாக்ஷி அவளை செருப்பாலடித்து வெளியேறுகிறாள். சுந்தர முதலியார் விசாலாட்சியின் பின் போவதைத்தடுத்த லீலாவதியை லட்சியம் செய்யாது பாங்கிக்குப்போகிறார் பறட்டை என்னும் பறைச்சி லீலாவதியிடம் வந்து அந்தம்மாள் முதல் புருஷன் பானு முதலி ஜெயிலிலிருந்து தப்பித்தோடிப்போனசேதியைச்சொல்லிப்போக அதன் விவரமறிய லீலாவதி போகிறாள். தன் உயிரைத்துறந்த விசாலாட்சி கிணற்றில் குதிக்கப்போகும் வேளை, அவ்வழி வந்த பாங்கர் ராமதாஸ் தடுத்து சுந்தர முதலியாரிடம் அழைத்துப் போகிறார். 3. சுந்தர முதலியார் விசாலாட்சியைத்தேட ஆட்களை அனுப்பியதும் பானுமுதலி ரசீதுடன் வந்துதான்பந்தோபஸ்துக்காக வைத்துப்போன நகைப்பெட்டியைக்கேட்க குறித்த இடத்தில் பெட்டியைக்காணாததால், தன் பாகஸ்தர் மோகன முதலியார் வந்த பிறகு பெற்றுக்கொள்ளும்படி சொல்லியும் கேளாத பானு முதலியை போலீஸில் ஒப்புவிப்பதாய் கூற பானு முதலி ஓடி போகிறான். பெட்டி பாங்கி கணக்கு முதலிய விபா

மறிய மோகன முதலியார் ஏஜெண்ட் கோபால்சாமி இருவரும் வரவேண்டி தந்தி கொடுத்துவிட்டு பாங்க் பின் மாடிக்குப்போக அங்கு வந்தபூபதியிடம்சமாதானமாய்ப்பசி அனுப்பிவிட்டதும், பின்னை வந்த கோபால்சாமியைக் கடிந்தனுப்புகிறார். விசாலாட்சி பீப்பிள்ஸ்பார்க்கிலிருக்கிறாளென்னும் கடிதம்வர வாசித்து, அங்குபோக இறங்கிவந்த சுந்தர முதலியாரை சீதாராமன் சில ஆட்களுடன் வந்து பண்டையில் அடித்து தூக்கிப்போய்விடுகிறார்கள். பாலு முதலி சுந்தர முதலியார் உடையில் மாடிக்குச் சென்று பெட்டியைக்காணாது கீழ் இறங்கியதும், மாடியில் மறதியாய் வைத்து விட்டதன பேர் பதித்த காரட்களை எடுத்துவர திரும்பவும் மேலே போனதும், மோகன முதலியார் வந்து மேலே போனவர் சுந்தர முதலியாரென்னும் நிச்சயத்துடன் அவரைக் கொல்லவேண்டிய முடிவுடன் மேலே போய் பாலுமுதலியாரைத் தூக்கித் தரையிலறைந்துவிட்டிறங்கிவர எதிர்பட்ட விசாலாட்சியைக்கண்டு, அவள் தந்தையை பூபதி தரையிலறைந்து கொன்றுபோட்டதை தானே பார்த்ததாகவும், தன்னையே மணம்புரிய சம்மதித்தால் பூபதியைக்காட்டிக்கொடுப்பதில்லை யெனக்கூறி தன்னுடன் அழைத்துப்போகிறார். போலீஸ் பீட் ஜவானால் பிரேதம் காணப்பட்டு, சுந்தர முதலியார் புத்தி சிதறியதால் மாடியிலிருந்து தவறி விழுந்தாரென முடிவுசெய்து பிணத்தை அடக்கம் செய்ய உத்தரவாகிறது. 4. பிணக்கோலக்காட்சி லீலாவதியிருக்குமிடத்தில் இருக்கப்படாதென்னும் கொள்கைகொண்டபூபதி அவள் வார்த்தையைத்தடுத்துப்போகிறார். 5. கையெழுத்தில்லாத கடிதம் கண்டதும், பிறர் சந்தேகிக்கக்கூடாதென்றெண்ணிய மோகன முதலியார் துப்புத்துலங்க கோவிந்தனைக் காணப்போகிறார். 6. கோவிந்தன் தனக்குக்கிடைத்த சில ஆதாரங்களால் கொலைசெய்த நம்பரைக்கண்டு பிடிக்க முடியாதென மோகன முதலியாரிடம் சொல்லிவிட்டு, பூபதியை சந்திக்கப் போகிறார். 7. பூபதியிடம் மோகன முதலியாரும், இன்ஸ்பெக்டரும் பேசிப்போனதை மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த, கோவிந்தன், பூபதி போலீஸ் காவலிலிருப்பதால் அவர் வீட்டை விட்டுப் போகப்படாதென எச்சரித்துப்போகிறார், விசாலாட்சியைத்தேடிப்பிடிக்கும்படி சொல்லவந்த லீலாவதிக்கு விசாலாட்சி தகவல் தெரிந்ததும் அவளுக்குத்தெரிவிப்பதாய் பூபதி கூறுகிறார். 8. விசாலாட்சி பிரசுரத்தாலறிந்த ராமதாஸ் அவளிடமிருந்து தனக்கு கிடைத்த கடிதத்தை கோவிந்தனிடம் கொடுத்து அவள் விஷயத்தில் கோவிந்தன் ஸ்ரத்தையுடன் வேலைசெய்ய

வேண்டுமென வேண்டிப்போகிறார். 9. தன்னைக்காணவந்த கோவிந்தனை ஏய்க்கவெண்ணி கோபால்சாமி கதவை பூட்டிக் கொண்டோடிப்போக, முன் கூட்டியே ஏற்பாடு செய்திருந்து மறைந்திருந்த கோவிந்தன் சிஷ்யன் சீனு அவனைப்பின் தொடர்ந் தோடுகிறான். ஜவான் உதவியால் வெளிப்பட்ட கோவிந்தன் விசாலாட்சியைக்கண்டு பிடிக்க ஸ்ரீபெரும்புதூருக்குப் போகிறான்.

அங்கம் 4.

1. தோசைக்கடை லக்ஷ்மி வார்த்தைப்படி கோபுவைச் சந்தித்து அவன் மூலமாய் அவன் காதலி மரகதமென்பவளைக் கண்டு பேசி விசாலாட்சி போனதிக்கை நோக்கிப்போகிறான்.
2. கோயம்புத்தூர் சத்திரத்தில் கோபாலசாமியைக்கண்ட கோவிந்தன் அவனை மிரட்டி பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருக்கச் செய்து தன்னுடனழைத்துப்போகிறான். 3. கோவிந்தன் ஆஸ்பத்திரி ஸர்ஜனிடம் கோபால்சாமி பைத்தியம்பிடித்தவனென் ஸர்ட்டிபிகேட்டும் பெற்று கோபாலசாமியை சென்னை ஆஸ்பத்திரிக்கனுப்புகிறான். 4. விசாலாட்சிகந்தவனத்திலுலாவக்கண்ட கோவிந்தன் பூபதிக்கு தந்தியனுப்பி தான் மறைந்து விசாலாட்சியை கவனித்துகொண்டிருக்கிறான் 5. விசாலாட்சியின் விவரம் பூபதியாலறிந்த லீலாவதி போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு கடிதமூலமாய்த்தெரிவித்து, தானும் ரெயில்வே ஸ்டேஷனில் பூபதியை சந்தித்து அவனுடன் போகவிரைந்து போகிறாள்.

ஒருகால் லீலாவதி தன்னுடன் வந்தால் விசாலாட்சி மனம் வருந்துவாளென்றெண்ணிய பூபதி. லீலாவதி கண்ணில் படாதபடி ரெயில்லேறி விட தீர்மானிக்கிறார். 6. விசாலாட்சியும் பூபதியும் தாகத்திற்கு கொண்டிருக்கும் சமயம், இன்ஸ்பெக்டர் மீதானேறி விசாலாட்சியை லைசு செய்வதாகக்கூற லீலாவதியும் வந்து தூக்கிப்பதாய் நடிக்கிறாள் எதிரில் மறையர் மறைந்திருப்பதை கோவிந்தன் இன்ஸ்பெக்டருடன் கூற, அவர்கள் யாவரையும் பிடித்து கைதிசெய்த பிறகு, கோவிந்தன் விரும்பியவாறு விசாலாட்சியை ஏழுநாள்வரையில் கைதிசெய்வதில்லையென இன்ஸ்பெக்டர் வாக்களிக்கிறார். சீதாராமன் தன் ஆட்களுடன் சுந்தரமுதலியாரை இம்சிக்கும் வேளை, கோவிந்தன் விரைந்து வந்து முதலியாரைக் காப்பாற்றி, அவர்களை கைதிசெய்கிறான். 8. உண்மைக் குற்றவாளியை ஏழு நாளிற்குக் காட்டுவதாய் கோவிந்தன் கூறியபடி அங்குவந்த இன்ஸ்பெக்டர், லீலாவதி பூபதிக்கு தன் மேல் நல்லெண்ணமுண்டாகும்படி தான் தான் சுந்தரமுதலியாரைக் கொன்றதாகச் சொன்னதும், அவளைக்கைதி செய்வதாய்ச் சொன்ன இன்ஸ்பெக்டரிடம் கோவிந்தன் எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேளாமல் லீலாவதியை இன்ஸ்பெக்டர் பிடிக்கப்போகிறார். மோகனமுதலியார் வந்தது, கொலை செய்தவனை அவர் உத்தரவுப்படி கண்டுபிடித்து விட்டதாய்ச் சொல்ல அவர் யாரென விசாரிக்க மோகனமுதலியார் தானே பாங்கில் தான்செய்த மோசம் வெளிவாராதிருக்க சுந்தரமுதலியென்று நம்பி பாலு முதலியை தள்ளிக்கொன்றதாய் முன்கூட்டி மறைத்து வைத்திருந்த சுந்தரமுதலியை விசாலாட்சி முதலியாரை கொண்டுஹாஜர்ப்படுத்த மோகனமுதலியார் கோவிந்தன் முன்கூட்டி எழுதிவைத்திருந்த குற்றப்பத்திரத்தில் கையெழுத்து செய்து விஷமுண்டு இறக்கிறார்.

9. ஜெயில் மோகனமுதலியார் வாக்குமூலப்படி கோவிந்தன் லீலாவதியை விடுதலைசெய்து கூட்டி வரவும் எதிராய் கைதியாக்கப்பட்டு வந்த சீதாராமமுதலியார் வகையறாவும் லீலாவதியால் தங்கள் குடும்பம் அநியாயமாய் ஒழிந்ததை மட்டு தாசித்து ஜவானிடமிருக்கும் கத்தியைபிடுங்கி லீலாவதியை வெட்டிக் கொல்கிறான் உடன் கலகமுண்டாக யாவரும்ஜெயில் சேர்கிறார்கள் கோவிந்தன் கோபாலசாமியை விடுவிக்கப்போகிறான்.

10. விசாலாட்சி பூபதி கல்யாணம். சுபம். சுபம்.